2009 ஜூலை 21] [பேரவைத் தலைவர்]

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்களை அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2009–2010 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தவிர, மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 227–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(ஐ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை / ஆட்சிக் குழு / நிருவாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்புகள். தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவையின் (Senate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. மா. ராஜசேகரன் ஆகியோரிடமிருந்து வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. மா. ராஜசேகரன் ஆகியோர் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–8–2012 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களது ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

பாரதியார் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். மணி மற்றும் திரு. சு.ப. வேலுமணி ஆகியோரிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். மணி மற்றும் திரு. சு.ப. வேலுமணி ஆகியோர் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–8–2012 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள், ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களது ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதியதாக அமைக்கப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு திரு. சி. ஞானசேகரன், சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு வரப்பெற்றுள்ளது. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவரது ஆட்சிக் குழு (Syndicate) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

2009 ஜூலை 21]

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிருவாகக் குழு (Board of Management) உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு வரப்பெற்றுள்ளது. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்ற வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் 10–8–2012 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய நிருவாகக் குழு (Board of Management) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினர்களாகப் பணியாற்றுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களான திரு. மு. அப்பாவு மற்றும் திரு. பா. வேல்துரை ஆகியோரிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெறவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மு. அப்பாவு மற்றும் திரு. பா. வேல்துரை ஆகியோர் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–8–2012 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களது ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.